19.01.2026

O.S.No. 250/2020

DW1– பகவதியப்பன் – த/பெ. திருமலையப்பப்பிள்ளை

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 19.01.2026

குறுக்கு விசாரணை தொடர்ச்சி : ( வாதி தரப்பில்)

8. எனது கட்சிப்படி தென்வடல் அளவு என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்ட CL பகுதி கீழ்புறம் தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து உள்ளது என்றால் சரியல்ல, அது CL க்கு தென்புறமாக உள்ளது.

9. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான்குமால் தபசில்விவரத்தில் "எனக்கு சொந்தமான பொதுமனைக்கு கிழக்கு என்று காட்டப்பட்டுள்ளது, அந்த தொழு ராஜசுப்பிரமணியனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதில் தங்கள் கைவசமனைக்கு வடக்கு என காட்டியுள்ளது,பொதுமுற்றம் மழைஜலம் போகும் பாதைக்கு தெற்கு, தங்கள் கைவசமுள்ள 1/94 வீட்டிற்கு மேற்குமானது என்றுள்ளது" என்றால் சரிதான், மேற்படி தபசில்விவரம் தான் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்ட CL பகுதிக்கு கிழக்கு இடம் என்றால் 1/94 ல் தான் அடங்குகிறது.

10. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் ராஜாசுப்பிரமணியன் வீட்டின் பழைய கதவு எண். 1/92 புதிய எண்.136 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் PN பகுதிக்கு கிழக்கேயுள்ள 1/93 என்ற கதவு எண் கொண்ட வீடானது எனது வீடு என்றால் சரிதான், அதன் புதிய கதவு எண்.137 என்றால் சரிதான்.

11. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 136, 137 வீடுகளுக்கு இடையேயான பகுதி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி ராஜாசுப்பிரமணியனுக்கு பாத்தியப்பட்டது என்று ஆவணத்தில் உள்ளது என்றால் ஆவணத்தில் உள்ளது. நான் இதற்கு முன்பு எனது சாட்சியத்தில் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தானது பி.வா.சா.ஆ.4 வரைபடத்தில் EF பகுதிக்கு தென்புறமாக உள்ளது என சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

12. 1/93 என்ற எண் கொண்ட வீடு எனது தகப்பனாருக்கு, சிவராமன் எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். நான் எனது முந்தைய சாட்சியத்தில் மேற்படி இடமானது பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் GHCD கிழக்கு என்று கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் MLCH ராஜாசுப்பிரமணியன் தொழுமனை என்றால் சரிதான். ராஜாசுப்பிரமணியனுக்கு பாத்தியப்பட்ட தொழுமனையில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரிதான்.

13. எனது கட்சிப்படி பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள HC பகுதிக்கு தென்பக்கத்தில் இருந்து எனது இடம் ஆரம்பமாகிறது. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள GD பகுதிக்கு தெற்கேயுள்ள இடமானது எனதுதந்தையும், ராஜாசுப்பிரமணியனும் சகோதரர் என்பதால் 1968 ல் சேர்ந்து வாங்கினார்கள் என்றால் எனதுதந்தை அவரது சகோதரருக்காக சேர்த்து வாங்கினார். மேற்படி இடத்தில் ராஜாசுப்பிரமணியன் தனக்கு பாத்தியப்பட்ட பங்கினை 14.10.1998 தேதியில் தனது சகோதரான எனது தந்தைக்கு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான்.

அந்த ஆவணத்தை சாட்சியிடம் படித்துக்காண்பிக்கப்பட்டது. மேற்படி ஆவணம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் தென்வடல் 30 ¼ அடி என்றுதான் காட்டப்பட்டுள்ளது, அதேதான் கிரைய ஆவணத்திலும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கட்சிப்படியே பார்த்தாலும் ராஜாசுப்பிரமணியன் தொழுமனைக்கு அடுத்து 30 ¼ அடி பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல.

14. நானும், எனது சகோதரர்களும், தகப்பனாரும் சேர்ந்து 26.12.2011 தேதியில் பாகபிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரிதான்.என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி பாகபிரிவினை ஆவணம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பதிவு ஆவணம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15. வா.சா.ஆ.5 ஆவணத்தில் ராஜாசுப்பிரமணியன் தொழுமுனைக்கு அடுத்து 30 ¼ என பதிவு செய்து ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 EF பகுதிக்கு தெற்கே ஆறுமுகம் பிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தின் சொல்லப்ப்டடிருக்கும் 4 அடி அகலமுள்ள கிழமேல் பாதையும், தென்வடல் பாதையும் எனக்கும், வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்ட 3 வது நபருக்கும் பாத்தியப்பட்டபொதுநடைபாதை என குறிப்பிட்டிருப்பது மேற்படி 30 ¼ அடிக்குள்தான் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

16. பி.வா.சா.ஆ.3 ஆவணத்திற்கும், தபசில்சொத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் EF பகுதிக்கு தெற்கே ஆறுமுகம்பிள்ளை வீட்டின் வடக்குசுவருக்கும் வடக்கேயுள்ள காலியிடமானது ஆறுமுகம் பிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் எனது ஆவணங்களுக்கும், எனது ஆவணத்தின் மூலஆவணங்களும் விரோதமாக 30 1/4 அடிக்கு கூடுதலாக தென்வடல் அளவுள்ளது என கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

17. நீதிமன்ற ஆணையர் எனதுஇடத்தை அளக்கவிடாததற்கு காரணம் எனதுபொய் கட்சி தெரிந்துவிடும் என்றால் சரியல்ல. எனது இடத்தையும் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தார். கதவு எண்.1/92 வீட்டிற்கு கீழ்புறம் தான் பி.வா.சா.ஆ.4 ல் கண்ட BPNO பகுதி தான் முடுக்கு என்றால் சரிதான்.

18. பி.வா.சா.ஆ.4 ல் கண்ட ON பகுதியில் ராஜாசுப்பிரமணியன் மாடிபடி கட்டிவிட்டார் என்றால் சரிதான், அதை எதிர்த்து புகார்கொடுத்துள்ளேன். பி.வா.சா.ஆ.4 ல் N பகுதிக்கு கீழ்பக்கம் மாடிப்படிக்கட்டுகள் கட்டியுள்ளேன் என்றால் சரிதான், பொதுபாதைக்கு இடம்விட்டுதான் கட்டியுள்ளேன். ஒரு ஆள் நடந்துபோகும் அளவுக்கு பாதைவிட்டுதான் கட்டியுள்ளேன். நான் மாடிப்படிகட்டுகள் கட்டியுள்ளதால்தான் அந்தஇடத்தையும் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யவிடவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ல் IOML பகுதியில் இருந்து JK பகுதிவரை நேரடியாக வரமுடியாது என்றால் சரிதான், அது வாதி கட்டிய சுவர் என்பதால் வரமுடியாது. வாதி கட்டியசுவரால் மட்டும்

பாதகம் இல்லை என்றும், எனது மாடிப்படியாலும் பாதகம் உள்ளது என்றால் சரியல்ல, எனது மாடிப்படியை இடம் விட்டுதான் கட்டியுள்ளேன். நான் எனது ஆவணங்களுக்கு விரோதமாக கூடுதல்அளவுகளாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகேட்டுள்ளபடி வாதியின் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி